வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 23-08-2026 நேரம் : மாலை 6.10 மணி

---

## தலைப்புச் செய்திகள்

2047ஆம் ஆண்டிற்குள், இந்தியா ஒரு வளர்ந்த நாடாக மாற, விண்வெளித் துறை முக்கிய பங்கு வகிப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

போர்க் கப்பல்கள், கடலோர காவல் படை கப்பல்கள், மற்றும், அது தொடர்பான பிற துறைகளை உருவாக்குவதில் தற்சார்பு அவசியம் என்று, மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தினார்.

அனைத்து பிரிக்ஸ் நாடுகளும் விளையாட்டுத் துறையில் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்து விசாகப்பட்டினத்தில் இன்று நடைபெற்ற மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல், 4 நாள் அரசுமுறை பயணமாக நாளை ஜப்பான் செல்கிறார்.

--------------------------

## தேசிய விண்வெளி தினம் 1 (7)

தேசிய விண்வெளி தினத்தை முன்னிட்டு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, மத்திய அறிவியல் மற்றும், தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்டோர், விஞ்ஞானிகளுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். மேலும் இதுகுறித்த கூடுதல் தகவல்கள்.....

(வாய்ஸ்)

## தேசிய விண்வெளி தினம் 2 (19)

(வாய்ஸ்)

2023 ஆகஸ்ட் 23ஆம் தேதியன்று, சந்தரயான்-3 நிலவில் தென்துருவப் பகுதியில், வெற்றிகரமாக தரையிறங்கிய தினமான இன்று, நாட்டின் விஞ்ஞானிகள், பொறியாளர்களுக்கு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், வாழ்த்து தெரிவித்துள்ளார். புதுமைப் படைப்பாளர்களின் அர்ப்பணிப்பு, தேசத்தை மேலும் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதாகவும், விண்வெளி ஆய்வில் இந்தியாவின் குறிப்பிடத்தக்க சாதனைகள், நாட்டின் அறிவியல் மேன்மை, புதுமைக்கான ஆர்வம் ஆகியவற்றிற்கு சான்றாக திகழ்வதாகவும் அவர் கூறினார். ககன்யான் போன்ற நாட்டின் லட்சியத் திட்டங்கள் பற்றியும் திரு. ராதாகிருஷ்ணன், தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

2047ஆம் ஆண்டிற்குள், இந்தியா ஒரு வளர்ந்த நாடாக மாற உறுதி பூண்டுள்ளதாகவும், இந்த இலக்கை அடைவதில், விண்வெளித் துறை முக்கிய பங்கு வகிப்பதாகவும், பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார். இதற்கிடையில், சமூக வலைதளத்தில் ஒரு காணொலியை பகிர்ந்து கொண்டுள்ள பிரதமர், விண்வெளித் துறையை, இந்தியா தொடர்ந்து விரிவுப்படுத்தி வருவதாக கூறியுள்ளார். GEN-Z தலைமுறை பொறியாளர்கள், வடிவமைப்பாளர்கள், மற்றும், விஞ்ஞானிகள், புதிய தொழில்நுட்பங்களை உருவாக்கி வருவதாகவும், அவர் தெரிவித்துள்ளார். மேலும், இந்தியாவின் தனியார் விண்வெளித்



துறை, உலகம் முழுவதும் தமக்கென, ஒரு தனித்துவமான அடையாளத்தை உருவாக்கி வருவதாகவும், குறிப்பிட்டுள்ள திரு. மோடி, இந்தியாவின் விண்வெளித் துறை, உலக முதலீட்டாளர்களை ஈர்ப்பதாகவும், தெரிவித்துள்ளார்.

மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், 2023 ஆகஸ்ட் 23ஆம் தேதியன்று, சந்தரயான்-3 நிலவில் தென்துருவப் பகுதியில், வெற்றிகரமாக தரையிறங்கிய தருணத்தை நினைவு கூர்ந்துள்ளார். பிரதமர் மோடியின் முற்போக்கான தொலைநோக்குப் பார்வையால் கிடைத்த இந்த வெற்றி, அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு உத்வேகம் அளிப்பதோடு, இந்தியாவின் புதுமைப் படைப்பு மனப்பான்மை மற்றும் வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற

இலக்கையும் பிரதிபலிப்பதாக, டாக்டர் ஜிதேந்திர சிங் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் விண்வெளிப் பயணம், நாட்டின் பெருமைக்க எடுத்துக்காட்டாக உள்ளது என்று, மத்திய தகவல் ஒலிபரப்புத் துஜற இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார். மேலும் இஸ்ரோ விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

---------------------------

## அகமதாபாத் விண்வெளி தினம் (15)

இந்தியாவின் விண்வெளி துறையில் ஏற்பட்டுள்ள சீர்திருத்தங்கள் மூலம், புத்தொழில் நிறுவனங்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக, மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார். இன்று அகமதாபாத்தில் நடைபெற்ற, 3ஆவது தேசிய விண்வெளி தின கொண்டாட்டத்தில் உரையாற்றிய அவர், விண்ணில் செலுத்தப்பட்ட செயற்கை கோள்களிடம் இருந்து பெறப்படும் தகவல்கள் மூலம், விவசாயிகள், மீனவர்கள், மற்றும், மக்களின் வாழ்க்கை தரம் மேம்பட்டுள்ளதாகவும், இந்தியாவை 45 பில்லியன் டாலர் விண்வெளி பொருளாதாரத்தை நோக்கி வழிநடத்த, விண்வெளி தொழில்நுட்பம் ஒரு முக்கிய தூணாக விளங்குவதாகவும், தெரிவித்தார். மேலும் டாக்டர் விக்ரம் சாராபாயி-ன் அழியாத பாரம்பரியத்தையும் அமைச்சர் எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில், இஸ்ரோ தலைவர் டாக்டர் வி. நாராயணன், மற்றும், விண்வெளி பயன்பாட்டு மையத்தின் இயக்குநர் திரு. வி.என். ராவ் உள்ளிட்ட விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், மற்றும், தொழில் துறை தலைவர்களும் கலந்து கொண்டனர்.

---------------------------

## ராஜ்நாத் சிங் (20)

போர்க் கப்பல்கள், கடலோர காவல் படை கப்பல்கள், மற்றும், அது தொடர்பான பிற துறைகளை உருவாக்குவதில் தற்சார்பு அவசியம் என்று, பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தினார். கொல்கத்தாவில், கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் அண்ட் இஞ்சினியர்ஸ் மற்றும், யந்த்ரா இந்தியா லிமிட்டெட் ஆகிய நிறுவனங்களின் 5

திட்டங்களுக்கான பூமி பூஜை விழாவில் உரையாற்றிய திரு. ராஜ்நாத் சிங், இந்தியாவை எதிர்கால கப்பல் கட்டும் மையமாக மாற்றும் நோக்கில், தற்சார்பு என்பது, காலத்தின் தேவை என்று கூறினார். இந்தியாவில் இருந்து உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பாதுகாப்பு பொருட்களின் தர உறுதி, மற்றும், குறித்த நேரத்தில் வினியோகம் செய்வது உள்ளிட்டவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார். நாட்டின் ஆயுதப் படைகள், தற்போது உள்நாட்டு தயாரிப்புகளை சார்ந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். மேலும், பொதுத் துறை நிறுவனமான ஜிஆர்எஸ்இ, கொல்கத்தாவின் ஷியாமா பிரசாத் முகர்ஜி துறைமுகத்துடன், ஹூக்லி ஆற்றங்கரையில், 2 சிறிய கப்பல் கட்டும் தளங்கள் மற்றும், ராய்ச்சக்கில், 32 ஏக்கர் ஆற்றங்கரை சொத்துக்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. இதன் மூலம், போர்க் கப்பல் கட்டுமானம், சீரமைப்பு, சிறிய மற்றும் நடுத்துர அளவிலான வர்த்தகக் கப்பல்களின் கட்டுமானம், மற்றும் பழுதுபார்த்தல் உள்ளிட்டவற்றில் கவனம் செலுத்தப்படும்.

---------------------------

## பிரிக்ஸ் மாநாடு 1 (17)

பிரிக்ஸ் நாடுகளின் விளையாட்டுத் துறை அமைச்சர்கள் மாநாடு, ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் இன்று நடைபெற்றது. மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில், இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை இணையமைச்சர் திருமதி ரக்க்ஷா காட்சே, மற்றும், பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் விளையாட்டுத் துறை அமைச்சர்கள், தூதுக்குழு தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில், விளையாட்டின் மூலம், பிரிக்ஸ் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும், அனைத்து பிரிக்ஸ் நாடுகளும் விளையாட்டுத் துறையில் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்தும் விவாதிக்கப்பட்டது. மேலும், பாரம்பரிய மற்றும் உள்நாட்டு விளையாட்டுகள், புதுமை தொழில்நுட்பம், மற்றும் விளையாட்டு உபகரண உற்பத்தியில், பிரிக்ஸ் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும், கலந்தாலோசிக்கப்பட்டது. முன்னதாக, பிரிக்ஸ் நட்பு மிதிவண்டி பயணத்தை தொடக்கி வைத்து பேசிய டாக்டர் மன்சுக் மாண்டவியா, ஆரோக்கியமான இந்தியா இயக்கத்தில், மிதிவண்டி பயிற்சி முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறினார்.

## பிரிக்ஸ் மாநாடு 2 (6)

இன்றைய நிகழ்வில், பிரிக்ஸ் நாடுகளின் பிரதிநிதிகள், மத்திய மாநில அரசுப் பணியாளர்கள், காவல் துறை ஊழியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஞாயிறுதோறும் மிதிவண்டி பயணம் என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வேண்டுகோளுக்கு இணங்க, நாடு முழுவதும் ஆயிரத்து 800 நகரங்களில் 50 லட்சம் இளைஞர்கள் மிதிவண்டி பயிற்சியை மேற்கொள்வதாக அவர் தெரிவித்தார்.

---------------------------

## பியூஷ் கோயல் 1 (7)

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல், 4 நாள் அரசுமுறை பயணமாக நாளை ஜப்பான் செல்கிறார். டோக்கியோ, நகோயா, ஒசாகா செல்லும் அவருடன், உற்பத்தி, செமி கண்டக்டர், தூய்மையான எரிசக்தி, மற்றும் எஃகு முதல், வாகனத் துறை, நிதி சேவைகள், சுகாதாரம், மற்றும், புத்தொழில் நிறுவனங்கள் வரையிலான பல்வேறு துறைகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட வணிகப் பிரதிநிதிகள் குழு ஒன்றும் செல்கிறது. இதுகுறித்த கூடுதல் தகவல்கள்.....

(வாய்ஸ்)

## பியூஷ் கோயல் 2 (20)

(வாய்ஸ்)

<u>இந்தியாவும், ஜப்பானும், வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், இந்த பயணம் அமைவதாக, அமைச்சகம் தெரிவித்துள்ளது. திரு. பியூஷ்கோயல், ஜப்பானிய நிறுவனங்களின் உயர்மட்ட தலைவர்களை சந்தித்து பேசுகிறார். திரு. கோயல், ஜப்பானிய தொழில் துறை அமைச்சர் திரு. அகசாவா ரியோசே-வுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு வார்த்தை நடத்துகிறார். மேலும், அந்நாட்டு நாடாளுமன்ற மூத்த உறுப்பினர்களை சந்திக்கும் அவர், அங்குள்ள இந்திய சமூகத்தினருடனும் கலந்துரையாடுகிறார். திரு. பியூஷ்கோயல், நகோயாவில், வர்த்தக மற்றும் தொழில் துறை கூட்டமைப்புடன் இணைந்து நடைபெறும் சாலை கண்காட்சி ஒன்றிலும் பங்கேற்கிறார். ஐச்சி மாகாண தலைவர்கள், மற்றும், வாகன, எஃகு துறைகளில் உள்ள முக்கிய உற்பத்தி முதலீட்டாளர்களுடனும்</u>

கலந்துரையாடுகிறார். மேலும், முன்னணி ஜப்பான் நிறுவனங்களுடன், தூய்மையான எரிசக்தி, உற்பத்தி, மின்னணுவியல் உள்ளிட்ட துறைகள் குறித்தும் விவாதிக்கிறார். இந்த பயணம், இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளுக்கு புதிய உத்வேகத்தை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது. 2047ஆம் ஆண்டில், தற்சார்பு இந்தியா என்ற இலக்கை அடையும் வகையில், உயர் தொழில்நுட்ப உற்பத்தி, மற்றும், அடுத்த தலைமுறை தொழில்களுக்கு இந்த பயணம் வழி வகுக்கும் என்றும் அமைச்சகம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

---------------------------

## ஜெய்சங்கர் (9)

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், 2 நாள் அரசு முறைப் பயணமாக இன்று ரஷ்யா செல்கிறார். அவர் அங்கு நடைபெறும் இந்திய- ரஷ்ய அரசுகளுக்கு இடையேயான ஆணையத்தின் 27ஆவது அமர்வுக்கு அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. செர்ஜீ லாவ்ரோ-வுடன் இணைந்து தலைமையேற்கிறார். இந்த பயணத்தின் போது, இரு நாடுகளுக்கும் இடையே, வர்த்தகம், அறிவியல், பொருளாதாரம், தொழில்நுட்பம், மற்றும், கலாச்சார ஒத்துழைப்புகள், பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சனைகள் குறித்து, இருதலைவர்களும் விவாதிக்க உள்ளனர்.

---------------------------

## விமானப்படை (9)

இந்திய விமானப்படை, ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பிட் பிளாக்-2026 பயிற்சி மற்றும், மலேசியாவில் நடைபெற்ற UDARA சக்தி-2026 பயிற்சி ஆகிய 2 சர்வதேச விமானப் பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. இந்த இரு நாடுகளுக்கான பணியமர்த்தல், செயல்பாடு, மேம்பட்ட ஒருங்கிணைப்பு, மற்றும், இந்தோ-பசிபிக் பிராந்திய பாதுகாப்பு உள்ளிட்டவைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை மையமாக கொண்டு, இப்பயிற்சி மேற்கொள்ளப் பட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த பயிற்சியில், இந்திய விமானப்படையின் ரஃபேல் உள்ளிட்ட போர் விமானங்கள் பங்கேற்றன.

---------------------------

## ஓனம் (8)

வரும் 26ஆம் தேதி ஓனம் பண்டிகை கொண்டாடப் படுவதை முன்னிட்டு, புதுச்சேரியில் இருந்து, மாஹேவிற்கு நாளை மற்றும் நாளை மறுநாள் மாலை 6 மணிக்கும், வரும் 26, 27 ஆகிய தேதிகளில் மாஹேவில் இருந்து புதுச்சேரிக்கு மாலை 5 மணிக்கும், சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக, புதுச்சேரி சாலை போக்குவரத்துக் கழகம் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது. இதற்கான கட்டணம், முன்பதிவு உட்பட 770 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

## வானிலை (7)

தமிழக கடலோரப் பகுதிகளில் கீழ்நிலை வளிமண்டலத்தில் காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுவதால், இன்று மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சீபுரம், ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி புதுச்சேரி மற்றும் கடலூர் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

---------------------------

## ஹாக்கி (9)

நெதர்லாந்தில் இன்றிரவு 10.30 மணிக்கு தொடங்கும் மகளிர் உலகக் ஹாக்கி போட்டியின் இன்றைய ஆட்டத்தில், இந்திய மகளிர் அணி, ஆஸ்திரேலிய அணியை எதிர்கொள்கிறது. இப்போட்டியில் இந்தியா வெற்றி பெற்றால் மட்டுமே அரையிறுதியில் பங்கேற்க முடியும்.

அமெரிக்காவில் இன்றிரவு நடைபெறும் ATP டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் தகுதிச் சுற்று இறுதி ஆட்டத்தில், இந்தியாவின் தக்சினேஷ்வர் சுரேஷ், ஜோர்டனின் அபிதல்லா ஷெல்பே-யை எதிர்கொள்கிறார். இன்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில், சுரேஷ், ஸ்பெயினின் ரோஜர் பேஸ்குவல் ஃபெராவை 3க்கு 6, 6க்கு 3, 6க்கு 4 என்ற செட்களில் வென்றார்.

---------------------------

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

2047ஆம் ஆண்டிற்குள், இந்தியா ஒரு வளர்ந்த நாடாக மாற, விண்வெளித் துறை முக்கிய பங்கு வகிப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

போர்க் கப்பல்கள், கடலோர காவல் படை கப்பல்கள், மற்றும், அது தொடர்பான பிற துறைகளை உருவாக்குவதில் தற்சார்பு அவசியம் என்று, மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தினார்.

அனைத்து பிரிக்ஸ் நாடுகளும் விளையாட்டுத் துறையில் ஒருங்கிணைந்து செய்படுவது குறித்து விசாகப்பட்டினத்தில் இன்று நடைபெற்ற மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல், 4 நாள் அரசுமுறை பயணமாக நாளை ஜப்பான் செல்கிறார்.